Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 31

National Tamil Daily தேசிய தினசரி

போன்: 389 யாழ்ப்பாணம் தபால் பெட்டி எண்: 45

குரோதி மாசி 28 துல்கஃபிறை 7 (11 3 65) வியாழக்கிழமை

அதிசயம் ஆனால் உண்மை

## தபால் பெட்டி இங்கு திறப்பு கொழும்பில்!



அதிசயம் ஆனால் உண்மை. இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தில்தான் நடந்திருக்கிறது. யாழ்ப்பாணம் பெரிய தபாற் கந்தோர் வாசலில் இரண்டு தபாற் பெட்டிகள் அழகாக-புதிதாக காட்சியளிக்கின்றன. அவற்றுள் போட்ட கடிதங்கள் - கிணற்றுள் போட்ட கல்மாதிரி சென்ற சில மாதங்களாகக் கிடக்கின!

காரணம் அந்தத் தபாற் பெட்டிகளைத் திறக்கும் திறப்பு இங்கு இல்லை ஆமாம், கொழும்பிலிருந்து இன்னும் அவை இங்கு வந்து சேரவில்லை!

இரண்டு தபால் பெட்டிகளுள் ஒன்றிற்குத் திறப்பு இல்லாததன் காரணத்தால் கடந்த மூன்று மாதங்கள் அப்பெட்டியில் போடப்பட்ட தபால்கள் போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது அங்கேயே பத்திரமாக இருந்ததாகவும் - கடிதங்கள் பெட்டிக்குள் நிரம்பியதன் பேரிலேயே அங்குப் பெட்டி அதிகாரிகளினால் உடைக்கப்பட்டு தபால்கள் வெளியில் எடுக்கப்பட்டு பின்னர் பட்டுவாடா செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இந்த குறிப்பிட்ட தபால் பெட்டி கொழும்பிலிருந்து இங்கு அனுப்பப்பட்ட பொழுது அதனுடன் திறப்பும் அனுப்பப்படவில்லையாம், அது அப்படியாயின், திறப்பில்லாத ஒரு தபால் பெட்டியை ஏன் பொது மக்கள் உபயோகத்திற்கு தபால் நிலையத்தில் வைத்திருக்கவேண்டும் என்று அந்தப் பெட்டியில் தபாலைப் போட்ட பொது மக்கள் கேட்கின்றனர். இது சம்பந்தமாக போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கும் தபால் தகவல் அமைச்சருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# காணி சுவீகரிப்பு; மேயர் எதிர்ப்பு

## சுப்ரீம் கோர்ட் வரை வாதாட யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபைஅமைக்கவிருக்கும்சந்தைக்குரிய காணியை அரசாங்கம் பஸ் நிலையத்திற்காக சுவீகரிக்கவிருப்பதற்கு மாநகர சபை ஆட்சேபனை தெரிவிக்கவிருக்கின்றது. இதுசம்பந்தமாக சட்டவல்லுநர்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு ஆட்சேபம் தெரிவிப்பது பற்றி ஆராய்வதற்கான விசேஷ மாநகரசபைப் பொதுக் கூட்டம் விரைவில் நடைபெறுமெனத் தெரிகிறது.

பொதுசன சேவைக்காக காணிகளைச் சுவீகரிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டாயினும் ஸ்தலஸ்தாபன சபை ஒன்றின் காணியை அரசாங்கம் சுவீகரிப்பது இதுவரை யாரும் கேள்விப்படாத அதிசய நடவடிக்கையாக இருப்பதாக மேயர் திரு. அ. செ. மகாதேவா நமது நிருபரிடம் கூறினர்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகரசபை சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து மாதிரிச் சந்தைநிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் இந்தக் காணியைச் சுவீகரிப்பது அநீதியானது இதற்கு நம் நமது எதிர்ப்பைத் தெரிவிததேதீருவோம், சட்ட நிபுணர்களின் ஆலோசனைப்படி சுப்ரீம் கோர்ட்வரை நமது ஆட்சேபணையைத் தெரிவித்து வாதாடுவோம்

## தேர்தல் அதிகாரியின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

தேர்தல் தினத்தன்று அரசாங்கசேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் தமது கடமையை உணர்ந்து திறமையுடன் நடுநிலைமை வகித்துச் செயலாற்ற வேண்டுமென்று அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கமிஷனர் திரு ஈ. எப். டயஸ் அபயசிங்கா விடுத்த செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் தினமாகிய மார்ச் 22-ந் திகதி அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் சேவை மிக மிக அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது அரசியல் கலப்பற்ற முறையில் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு நடுநிலைமையுடனும், திறமையுடனும் செயலாற்ற வேண்டும்" என்று அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## பத்திரிகை செய்தி தவறு அமைச்சின் மறுப்பு

கொழும்பு, புதன்

30 சீனர்கள் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டது சம்பந்தமாக குறிப்பிட்ட ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளியான செய்தி தவறு என பாதுகாப்பு வெளிவிவகார மந்திராலயம் விடுத்த அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

கடந்த 3-ம் திகதி இது சம்பந்தமாக குறிப்பிட்ட பத்திரிகை பிரசுரித்த செய்தியிலும் பார்க்க அதை நிரூபிக்கும் பொருட்டு இப்போது பிரசுரித்திருக்கும் செய்தி மிகவும் பிழையானது என்றும் அந்த அறிவிப்பு கூறுகிறது.

சீனர்கள் இங்கு தங்கியிருந்தது பற்றியசெய்தி பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியாது என அப்பத்திரிகை கூறியிருந்த செய்தியையும் அமைச்சு மறுத்துள்ளது. அதிகாரியின் அனுமதியின் மீதே இங்கு இறங்க அவர்கள் அனுமதிக்கப்பட்டதாயும், பொருளாதார சிக்கனத்தை முன்னிட்டு விமானமூலம் அவர்கள திருப்பிஅனுப்பப்பட்டதாயும் அமைச்சின் அறிவிப்பு கூறியது.

## திருச்சியில் மாணவர்கெடுபிடி

திருச்சி, மார்ச் 10

திருச்சியில் ஒரு கல்லூரியில் 2 ஆசிரியர்கள் மீது மாணவர்கள் வன்முறைச் செயலில் இறங்கியதால் அக்கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது. பள்ளிக்கூடத்திற்கும் சேதம் ஏற்பட்டதாம். மாணவர்களினால் திருச்சி ரயில் நிலையத்தில் 2 பெட்டிகளுக்கு சேதம் ஏற்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

## நெடுந்தீவுப்பகுதியில் 'ஈழநாடு' நிவாரணநிதி உதவி

'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிச்சபை சார்பாக திரு. கே. பி. ஹரன் நேற்று நெடுந்தீவிற்குச் சென்று தலைவரை இழந்த பல குடும்பங்களுக்கு நேரில் பொருள் உதவியும் பணஉதவியும் வழங்கினர். உதவி பெற்றோரினதும்-உதவி அளிக்கப்பட்டதுமான விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| திருச்செல்லம் கைம்பெண் பிலோமினா அம்மா கர்ப்பிணி 3 பிள்ளைகள் (8 துவாய், ஒருசேலை, 2ரின்பால்உணவு) | 55-00 |
| [illegible]நாயகம் தகப்பன் சீமான் மூடியட்பு (இவரில் 9 பேர்கள் தங்கியிருக்கிறார்கள்.) (ஒரு சேலை, 2 துவாய், 3 ரின்பால் உணவு) | 80-00 |
| யோசப் கைம்பெண் பபுலினு கைம்பெண் (ஒரு சேலை, ஒரு துவாய், 2 ரின்பால்உணவு) | 45-00 |
| யடுத்தின் கைம்பெண் செபமாலை (1 சேலை) | 30-00 |
| அருளப்பு கைம்பெண் பிலோமினம்மா (ஒரு சேலை, 2 துவாய், 2 ரின்பால்உணவு) | 60-00 |
| அந்தோனிப்பிள்ளை கைம்பெண் செபசிலியம்மா (ஒரு சேலை, 3 துவாய், 2 ரின்பால்உணவு) | 55-00 |
| திரேசம்மா | 25-00 |
| தொமஸ் பெனடிக்தோ கைம்பெண் லோறத்தம்மா ஒரு சேலை, 2 துவாய், 2 ரின்பால்உணவு) | 40-00 |

## 'ஈழநாடு' சூறாவளி நிதி

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு நேற்று வரை பொருளாகவும் பணமாகவும் 27,425 ரூபா 01 சதம்சேர்ந்துள்ளது. நேற்றைய வசூல் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ஓர் அன்பர், கண்டி | 10-00 |
| ஒரு செல்வி, நல்லூர் | 50-00 |

---

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறையில் நவீன வசதிகளுடன் அமைந்த புதிய தபால்நிலையம் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. இலங்கையின் பன்னிரண்டு இடங்களில் புதிய தபால்நிலையங்களை அமைப்பதற்காக அரசாங்கம் 60 லட்ச ரூபாய்வரை ஒதுக்கியுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் 12 புதிய தபால் நிலையங்களில் ஒன்று மட்டும் காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது இதற்கான வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

வடபகுதி அசைஸ் விசாரணை

## "வேலியோடு நின்று வெடி வைத்தார்"

### வவுனியா கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

வவுனியா கொலைமுயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காயமடைந்த சின்னத்தம்பி சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 62-ம் ஆண்டு அக்டோபர் 27 ம் திகதி, ஆசீர்வாதம், துரைராசா கற்பகம், சின்னத்தம்பி மூவரையும் கொலைசெய்ய முயற்சிசெதய்தாகவும், பேதுரு கொலை முயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புரக்டர் திரு. தளையசிங்கம் யோகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. சில்வா ஆஜரானர்.

காயமடைந்த சின்னத்தம்பி சாட்சியமளித்தபோது கூறியதாவது:- வெடிபட்ட தினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று பிற்பகல் 4-30 மணிக்கு நான் வீட்டிலிருந்தேன், நாகமணி வீட்டிலிருந்து கூக்குரல் சத்தம் கேட்டது. நான் நாகமணி வீட்டிற்கு ஓடிப்போனேன். கிணற்றைச் சுற்றி ஆட்கள் இருந்தார்கள். கிணற்றை எட்டிப் பார்த்தபோது அங்கு

(5-ம் பக்கம் பார்க்க)

நல்லூர்த் தொகுதி

## தேர்தல் பிரசாரக் கூட்டம்

காலம்: 11-3-1965 வியாழன் மாலை 5-30 மணிக்கு

இடம்: நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில்

தலைவர்: டாக்டர் சி. இராஜசூரியர்

பிரதம பேச்சாளர்கள்:

டாக்டர் N. M. பெரேரா (நிதி அமைச்சர்)

[ 6-45க்குப் பேசுவார் ]

தோழர் H. G. S. ரத்னவீரா

மற்றும் பலர்.

மணிவாக்கு

உகை க்ஷேமத்துக்காகப் பயிர் செய செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி கடவுள் எல்லாம் பார்த்துக்கொள்வார்.

—யோகசுவாமிகள்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

பழுப்பட்சம் குரோதி ஆண்டு மாசி மீ 28 உ (11-3-65)

## மருந்துத் தட்டுப்பாடு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை இனியும் நீடிக்கவிடுவது நல்லதல்ல.

சில மாதங்களுக்குமுன் நாடு முழுவதிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவியது. இப்பொழுது பல இடங்களிலும் நிலைமை சீரடைந்துவிட்ட போதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மருந்துத் தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடவில்லை. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இப்பொழுது மருந்துத் தட்டுப்பாடு இல்லை என்றும் நிலைமை திருப்தியாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைபெறச் செல்லும் நோயாளிகள் அங்கு உரிய மருந்துகளைப் பெறுவதில் சிரமப்படுவதுடன் கொடுக்கும் மருந்துகளிலும் திருப்திகொள்ளவில்லை.

ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெறச் செல்பவர்கள் பெரும்பாலும் வசதிகுறைந்த எளிய மக்கள் தான். அவர்கள் தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று சிகிச்சைபெறவோ மருந்துச் சாலைகளில் பணம் கொடுத்து மருந்து வாங்கவோ வசதியற்றவர்கள். காலையிலிருந்தே ஆஸ்பத்திரிகளுக்கு வந்து சேர்ந்து 'கியூ'வில் நின்று வேதனைப்படும் நோயாளிகள் பல மணிநேரம் காத்திருந்து இறுதியில் உரியமருந்துகிடைக்காமல் திரும்புவதாயின் அதைவிடக்கொடுமை வேறு எதுவும் இருக்கமுடியாது. மருந்துத் தட்டுப்பாட்டுக்கு பலகாரணங்களிருக்கலாம். வடக்கு கிழக்குப்பகுதி ஆஸ்பத்திரிகளிலிருந்து மருந்துகள் கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உத்தியோக மொழியான சிங்களத்தில் எழுதப்படாதிருப்பதால் அவற்றை 'சிவில் மெடிக்கல் ஸ்டோர்ஸ்' உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்துவதில்லையென்றும் இதுவே இப்பகுதிகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணமென்றும் கூறப்படுகிறது. இது உண்மையாயின் இச் செயல் நிச்சயம் கண்டிக்கப்பட வேண்டும்; உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ள ஊழியர்கள் உயிரைக் கொல்வதற்கு உத்தியோக மொழியைக் காரணம் காட்டுவதாயின் அந்த ஊழியர்களும், உத்தியோக மொழியும் அவசியம் தானா? இதே சமயம் மருந்துத்தட்டுப்பாட்டுக்கு உத்தியோக மொழியைக் காரணம் காட்டி சில ஆஸ்பத்திரிகளில் மோசடி நடைபெறுவதாகவும் பொதுவாகப் புகார் கூறப்படுகிறது. காரணம் எதுவாயினும் சுகாதாரசேவை பகுதியினர் சரியான முறையில் விசாரணை செய்து எளிய நோயாளிகளின் கஷ்டத்தை நீக்கி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பொதுத்தேர்தலும் அரசியல் கட்சிகளும் -4

# உடுவில், உடுப்பிட்டி, கிளிநொச்சி தொகுதிகள்

பருத்தித்துறைத் தொகுதியில் 1947-ம் ஆண்டு திருவாளர்கள் சி. இராமலிங்கம், எஸ். தர்மகுலசிங்கம், அ. சுப்பையா, பி. கந்தையா ஆகியோர் போட்டியிட்டனர். தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. சி. இராமலிங்கம் 4,288 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். 1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் சி. இராமலிங்கம், பி. கந்தையா, கே. சி. நடராசா, சி. பாலசிங்கம் ஆகியோர் போட்டியிட்டனர். 1956-ம ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் பி. கந்தையா கம்யூனிஸ்ட்கட்சி சார்பிலும், கே. துரைரத்தினம் தமிழரசுக்கட்சி சார்பிலும், எம். சிவசிதம்பரம் சுயேச்சையாகவும் போட்டியிட்டனர்.

மார்ச் மாதம் 1960-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது திருவாளர்கள் கே. துரைரத்தினம், என். நடராசா, சி. ஜெயதேவன், கே. சேனாதிராசா ஆகியோர் போட்டியிட்டனர். சுயேச்சையாக அப்பொழுது போட்டியிட்ட இரு அங்கத்தவர்களுமே கட்டுப்பணத்தை இழந்தனர். 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் திரு. கே. துரைரத்தினம் தமிழரசுக் கட்சி சார்பிலும், திரு. என். நடராசா தமிழ்க்காங்கிரஸ் சார்பிலும் போட்டியிட்டனர். 1956-ம் ஆண்டு முதன்முறையாக திரு. கே. துரைரத்தினம் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டு 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முறையாக பாராளுமன்ற அங்கத்தவரானார்.

1965-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் திருவாளர்கள் கே. துரைரத்தினம், என். நடராசா, கே. மோதிலால் நேரு ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 22,972. உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கும் இடங்கள், குடத்தனை, கட்டைவேலி, புலோலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, செம்பியன்பற்று. இனப்பிரிவு:- இலங்கைத் தமிழர்கள் 98.2 விகிதம், கீழ்நாட்டுச் சிங்களவர் .4 விகிதம், கண்டிச் சிங்களவர் .2 விகிதம், இலங்கை சோனகர் .1 விகிதம், பிற இனத்தவர்கள் 1.1 விகிதம்.

உடுவில் தொகுதி 1947-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது காங்கேசன்துறைத் தொகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது. 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் முதன்முதலாக நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது இத்தொகுதியில் திருவாளர்கள் வி. தர்மலிங்கம், பி. நாகலிங்கம், வி. பொன்னம்பலமும் வேறு நாலு அபேட்சகர்களும் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலின்போது இரண்டு அபேட்சகர்கள் போட்டியிட்டனர் திரு வி. தர்மலிங்கம் தமிழரசுக்கட்சி சார்பிலும், திரு. பி. நாகலிங்கம் லங்கா சமசமாஜக்கட்சி சார்பிலும் போட்டியிட்டனர். திரு. தர்மலிங்கம் 1960-ம் ஆண்டு பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு அண்மையில் பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை பாராளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றியிருக்கின்றார்.

தற்பொழுது நடைபெறவிருக்கும் தேர்தலில் திருவாளர்கள் வி தர்மலிங்கம், பி நாகலிங்கம், என் சிவநேசன் ஆகியோர் போட்டியிடுகின்றனர் இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 33,280. உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கும் இடங்கள் மானிப்பாய், பண்டத்தரிப்பின் ஒரு பகுதி, உடுவில் கிராமசபைபபகுதி, மல்லாகத்தின் ஒரு பகுதி. இனப்பிரிவு:- இலங்கைத் தமிழர்கள் 95.6 விகிதம், கீழ்நாட்டுச்சிங்களவர் .5 விகிதம், கண்டியின் சிங்களவர் .1 வீதம், இலங்கை சோனகர்கள் .1 விகிதம், பிற இனத்தவர்கள் .7 விகிதம்.

கிளிநொச்சித் தொகுதியின் ஒரு பகுதி 1947-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது சாவகச்சேரித் தொகுதிக்கும் - வவுனியாத் தொகுதிக்கும் இணைக்கப்பட்டிருந்தது. 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலின்போது திருவாளர்கள் ஏ. சிவசுந்தரம், ஏ. பொன்னம்பலம், பி. ஆறுமுகம், வி. ஆனந்தசங்கரி, சி. சரவணமுத்து ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலை பொதுத் தேர்தலின்போது திருவாளர்கள் ஏ. சிவசுந்தரம், வி. ஆனந்தசங்கரி ஆகியோர் போட்டியிட்டனர். திரு. ஏ. சிவசுந்தரம் தமிழரசுக் கட்சியில் இருந்து சென்ற ஆண்டு ராஜினாமாச் செய்துள்ளார். அவர் தற்பொழுது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை.

1965-ம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் கே. பி. இரத்தினம், வி. குமாரசாமி, வி ஆனந்தசங்கரி, சி. சரவணமுத்து, என். சேதுகாவலர், ஆர். சிவநாயகம், கே. செல்வநாயகம் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 18,738. உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கும் இடங்கள்: முகமாலை, புலோப்பழை, நல்லைப்பற்று, கராச்சி, துணுக்காய், பூனகரி, பல்லவராயன் காடு. இனப் பிரிவு: இலங்கைத் தமிழர்கள் 85-8 விகிதம், கீழ்நாட்டுச் சிங்களவர் 5.0 விகிதம், கண்டிச் சிங்களவர் 1.7 விகிதம். இலங்கைச் சோனகர் 1.5 விகிதம், பிற இனத்தவர்கள் 6.0 விகிதம்.

### உடுப்பிட்டித் தொகுதி

1947-ம் ஆண்டு பருத்தித்துறைத் தொகுதியுடன் சேர்ந்திருந்தது. 1960-ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், பி. கந்தையா, ஆர். ஆர். தர்மரத்தினம் கே ஜெயக்கொடி ஆகியோர் போட்டியிட்டனர் 1960-ம் ஆண்டுஜூலைமாதம்நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், கே ஜெயக்கொடி, எஸ் ஜெயசிங்கம் ஆகியோர் போட்டியிட்டனர்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் கே ஜெயக்கொடி, ஆர் ஆர் தர்மரத்தினம், எம். சிவசிதம்பரம், ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியின் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் தொகை 34,275.

# அரசியல் நிலைமை பற்றிய சிந்தனைகள்

தமிழ்மக்களின் இன்றைய அவலநிலையை ஓரளவுபோக்க அரசியல் கட்சிகள், தலைவர்கள் மக்கள் ஆகியோர் மதிநுட்பம், தியாகம் ஆகிய உபாயங்களைக் கைக்கொள்ளவேண்டியது அவசியம். இத்தருணத்தில் தமிழ்மக்கள் இரு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். முதலாவது அம்சம் நமது நிபந்தனைகளும் கோரிக்கைகளுமாகும்.

(1) கௌரவமான ஒரு தீர்வுக்கு பல்வேறு திட்டங்கள் உள்ளன. ஒரே திட்டத்தை மட்டும் இவ்விஷயத்தில் நம்பியிருப்பது கூடாது. குறுகிய கால, நீண்டகால திட்டம் தமிழ்மக்களின் நலனுக்கேற்ற வகையில் இருக்கவேண்டும் என்பது நம் ஞாபகத்தில் இருக்கவேண்டும். மாற்று திட்டங்களுக்குப் பதில் இடைக்கால ஏற்பாடுபற்றியும் நாம் பரிசீலிக்கவேண்டும்.

(2) எங்கள் லட்சியங்கள், திட்டங்கள் ஆகியவற்றை நாம் வகுக்குமுன் அவற்றை அடையும் மார்க்கங்களையும் தமிழ்மக்கள் சிந்திக்கவேண்டும், எங்கள் அரசியல் லட்சியங்களை சாதிப்பதற்கான சில வழிவகைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறன.

(1) பாராளுமன்ற வேலைகள்.

(2) சொற்பொழிவு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நாடு முழுதும் குறிப்பாக சிங்கள மக்களிடையே தமிழ்மக்களின் கருத்து, அபிலாஷை ஆகியவற்றை பிரசாரம் செய்தல்.

(3) சிங்களத் தலைவர்கள், தமிழர்களல்லாத இதர தலைவர்களுடன் மகாநாடுகள்.

(4) எங்கள் லட்சியத்தை அடைய அரசியல் நிர்ணய சபையொன்றை நிறுவுதல்.

(5) எங்களுக்கு நிவாரணம் பெறுமுகமாக சட்ட நடவடிக்கைகள்.

(6) இந்த முறைகளில் தோல்வி கிட்டினால் தமிழ் மக்களின் கோரிக்கைகளை உதாசீனம்செய்து சிங்கள மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்த பிரிட்டிஷ் அரசாங்கம், பார்லிமென்ட், பிரிட்டிஷ் மக்கள் ஆகியோருடன் தமிழ்மக்களின் பிரச்னையை மேற்கொள்ளுதல்.

(7) இதர காமன்வெல்த் நாடுகளுடன் இப்பிரச்னை பற்றித் தொடர்பு கொள்ளுதல்.

(8) இவையும் தோல்வியுறும் பட்சத்தில் ஐ. நா. வுடனும், இதர உலக நாடுகளுடனும் தமிழர் பிரச்னை பற்றித் தொடர்பு கொள்ளுதல்.

(9) இக்கமுறையும் தோல்வியுற்றால் இறுதியாக ஒத்துழையாமை, சட்டத்திற்குக் கீழ்படியாமை, நேரடிநடவடிக்கை (பலாத்காரபிரயோகம் உட்பட) ஆகிய பல நடவடிக்கைகளை மேற்கொள்தல்.

இலங்கையின் தற்போதைய நிலையில் மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 10 வருட அவகாசம் தேவையாய் இருக்கும். ஆனால் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் தமிழ்மக்கள் தங்கள் லட்சியங்களை அடைய முடியும்,

தமிழ் மக்கள் பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளைத்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

அந்தச் சூறாவளி அடித்ததே. அதற்கும் ஒருவிதத்தில் 'தாங்ஸ்' கூற வேண்டும் போல் தோன்றுகிறது ஏன் தெரியுமா? சூறாவளியிலே தங்கள் அருமைக் கணவன்மார்களையும், புதல்வர்களையும் இழந்த எட்டுக் குடும்பங்கள் நெடுந்தீவில் தவிப்பதாக அறிந்ததும், அங்கு நேரில் சென்று அவர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்று 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதி மூலம் கட்டளை பிறந்தது. அழகான அந்தத் தீவுக்குச் செல்ல வேண்டுமென்று எனக்குப் பல காலமாக ஆசை. அதைப் பூர்த்தி செய்யவும் அம்மக்களுடன் நேர்முகமாகத் தொடர்பு கொள்ளவும் இதனால்தான் ஒரு நல்ல "சான்ஸ்" கிடைத்தது. இல்லாவிட்டால் தேர்தல் நெருக்கடியான இச்சமயத்தில் எனக்கு அங்குஎப்படி செல்ல முடிந்திருக்கும்? அங்குள்ள மக்களின் அன்பையெல்லாம் அமோகமாக எப்படிப் பெற்றுக் கொண்டிருக்க முடியும்?

* * *

ஊர்காவற்றுறையிலிருந்து காலை 9-30க்கு நெடுந்தீவுக்கு ஒரே ஒரு படகு புறப்படுகிறது. கடும் வெயிலில் காயவேண்டியிருக்குமே என்று சில அன்பர்கள் எச்சரித்தார்கள். மற்ற வசதியான இருபடகுகளும் நீண்டகாலமாக பழுதுபட்டுள்ளனவாம் மராமத்து இலாகா ஒருவருஷ காலமாக ரிப்பேர் செய்து வருவதாகக் கேள்விப்பட்டேன். ரிப்பேராக இன்னும் எவ்வளவு வருடங்களாகுமோ! அதற்கிடையே வல்வெட்டித்துறையின் "உபய"மான ஒரு படகுதான் இத்தத் தீவுக்கு நம்மை ஏற்றிச் செல்லுகின்றது. வல்வையம்பதிக்கு ஒரு தாங்ஸ்!

தலையில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு படகில் ஏறினேன். கொழும்பிலிருந்து செல்வந்தரான ஒரு பறங்கியர் குடும்பமும் அப்படகில் ஏறியது. நெடுந்தீவிலே பத்து நாட்கள் நிம்மதியாக விடுமுறை கழிக்கச் செல்லுவதாயும், 35 வருடங்களுக்கு முன் அங்கே தம் மனைவியுடன் 'தேன்மதி'யைக் கழிக்கச்சென்றதாயும், அப்பறங்கியர் தெரிவித்தார். அந்தத் தீவின் அழகும் அருமையும் இதன்னிலங்கைக்கும் உலகத்துக்கும் தெரியாதென்றும், தெரிந்தால் அது ஒரு பெரிய "டூரிஸ்ட்சென்டர்" ஆகி ஏராளமான யாத்திரிகர்கள் அங்கு வருவரென்றும் அவர் கூறியதைக் கேட்க எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது.

கடலில் 17 மைல் தூரத்தையும் இரண்டு மணி நேரத்தில் கடந்து, பல அழகான தீவுகளையும், நயினா ஸ்ரீ நாகபூஷணி அம்மையையும் தூரத்திலிருந்தே தரிசித்துக்கொண்டு சுகமே நெடுந்தீவு சேர்ந்தோம். இன்முகங்கள் பல எங்களை அன்பாக வரவேற்றன. 'ஈழநாடு' புயல் கஷ்ட நிவாரணநிதியின் சார்பாக வருவதாக அறிந்ததும், படகுக்காரர்கள் கூட கட்டணம் வாங்க மறுத்துவிட்டார்கள்!

* * *

அங்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்காதோ என்று நினைத்திருந்தேன். ஆனால் அவர்கள் கொடுத்த குழாய்த் தண்ணீர் அருமையாக இருந்தது. தென்னைகளும் பனைகளும் நம்மை 'வருக வருக' என்று வரவேற்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு அழகும் விசேஷமும் அளிப்பது அதன் தீவுகளே. அவற்றில் மிகப் பெரியது நெடுந்தீவு தான். ஏழுமைல் நீளமுள்ள அத்தீவில் பஸ்போக்குவரத்தின்றி மக்கள் மிகக் கஷ்டப்படுகிறார்கள்: ஒருநாளுக்கு ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

# "எனது சீன விஜயம் வெற்றியளித்தது"

—அயூப்

## சீன-பாகிஸ்தான் கூட்டறிக்கை பற்றி டில்லியில் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 10

சீன-பாகிஸ்தான் கூட்டறிக்கை அவ்விரு நாடுகளும் இந்தியாமீது கொண்டிருக்கும் பகை மனப்பான்மையை எடுத்துக் காட்டுவதாய் இருப்பதாக புதுடில்லியில் பார்வையாளர்கள் கூறுகிறார்கள்.

இருநாடுகளும் பேராசை தேசிய வெறியைக் கடைப்பிடிப்பதாயும், அவைகளின் கூட்டத்தையும் போக்கும் அண்டை நாடுகளை அச்சுறுத்துவதாயும் ஆசியாவுக்கு உண்மை அபாயத்தை உண்டு பண்ணுவதாயும் இருப்பதாக அவர்கள் மேலும் கூறினர்.

சீனா, தானே அணுகுண்டை வெடித்துவிட்டு இந்து சமுத்திரத்தில் அணு அபாயம் இருப்பதாக எதிரடிப்புத் தெரிவிப்பது பொருத்தமில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சீன சுற்றுப் பிரயாணத்திலிருந்து நேற்று டாக்கா திரும்பிய பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் தமது சீன விஜயம் வெற்றியளித்திருப்பதாயும், இருநாடுகளின் கட்புறவும் அதிகரித்திருப்பதாயும் கூறினார். இரு நாடுகளும் ஒன்றை ஒன்று நன்குணர்ந்து புரிந்து கொள்ள இந்த விஜயம் உதவியதாயும் அவர் கூறினார்.

காஷ்மீரின் தலைவிதியை அந்த மக்களே நிர்ணயிக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் நிலையை சீனத்தலைவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு அவர் நன்றி தெரிவித்தார். தமது விஜயம் மகிழ்ச்சிகரமாய் இருந்ததாயும் அவர் கூறினார்.

வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ பேசுகையில் இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததெனக் குறிப்பிட்டார்.

அதேசமயம் ஆசிய ஆபிரிக்க மகாநாட்டுக்குச் செல்லும்போது தாம் கராச்சிக்கு அல்லது ராவல்பிண்டிக்கு விஜயம் செய்யப் போவதாய் சீனப் பிரதமமந்திரி திரு. சூ-என்-லாய் தெரிவித்திருக்கிறார். மே மாதத்திலிருந்து தாம் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யவிருப்பதாயும் அவர் கூறினர்.

சீன ஜனாதிபதி திரு. லியூ-ஷா-சீ, பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யும் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

# "திபேத் மீட்சிக்கு உலக மக்கள் உதவவேண்டும்"

## 'சீனக் கொடுமை' பற்றி தலாய்லாமா கண்டனம்

புதுடில்லி, மார்ச் 10

சீனா, திபேத்திய மக்களைக் கொடுமிராண்டித் தனமாகவும் மனிதத்தன்மையற்ற முறையிலும் நடத்தி வருவதாக தலாய்லாமா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

உலகமக்கள் திபேத்திய மக்களின் சுதந்திரத்தைக் காக்க முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சீனர்களின் கொடுமையால் ஆயிரக்கணக்கான திபேத்திய மக்கள் கஷ்டமான பாதைகளில் நெடுந்தூரம் சென்று அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதாயும் தலாய்லாமா கூறினார்.

சீனர்கள் பஞ்சன்லாமாவை ஒரு "பந்தமாக"ப் பயன்படுத்தியும் திபேத்திய மக்களின் அபிலாஷையை அடக்க முடியவில்லை என்றும் திபேத்திய மக்கள் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்றும் தலாய்லாமா கேட்டுக் கொண்டார்.

தென்கிழக்காசிய நாடுகள் சீனாவின் அபாயத்துக்கு உட்பட்டிருக்கிறது என்பது இந்தியாமீது அது தாக்குதல் நடத்தியதிலிருந்து நிரூபிக்கப்பட்டுவிட்டதாயும் அவர் கூறினார்.

# "பாகிஸ்தானை நம்பி மோசம் போகாதீர்"

## அப்துல்லாவுக்கு அஜாத் காஷ்மீர் மாஜி தலைவர்கள் எச்சரிக்கை

ஜம்மு, மார்ச் 10

அஜாத் காஷ்மீரின் 4 மாஜி ஜனாதிபதிகள் தற்போது வெளிநாடு சென்றிருக்கும் ஷேக் அப்துல்லாவுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்கள். பாகிஸ்தானின் வஞ்சக வலையில் விழுந்து ஏமாறாமல் இருக்குமாறு அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சௌத்திரி குலாம் அப்பாஸ், சர்தார் முகம்மது இப்ராஹிம், கே. எச். குர்ஷித், மௌல்வி யூ சுட்ஷா ஆகிய நால்வரும் தான் இந்த மாஜி ஜனாதிபதிகள்.

சென்ற 17 ஆண்டுகளாகப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அஜாத் காஷ்மீர் மக்களுக்கு சொல்லொணுக் கொடுமைகளை புரிந்திருப்பதாய் அவர்கள் ஷேக் அப்துல்லாவுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

"நாங்கள் பாகிஸ்தானில் சேருவதை விரும்பவில்லை. அதைப் பார்க்கிலும் இறக்கத் தயாராக இருக்கிறோம். அஜாத் காஷ்மீர் மக்கள் தமக்குச் சொந்தமான தேர்தலை நடத்த முடியாமல் பாகிஸ்தான் தலைவர்கள் இடைவிடாது தடுத்து வந்திருக்கின்றனர்" என்று இந்த நான்கு மாஜி ஜனாதிபதிகளும் ஷேக் அப்துல்லாவுக்குத் தெரிவித்திருக்கிறார்களாம்.

## சாஸ்திரி

புதுடில்லி, மார்ச் 10

மொழிப் பிரச்னை பற்றி ஆர அமர ஆலோசிக்கவேண்டும் என பிரதம மந்திரி திரு. சாஸ்திரி ராஷ்டிரபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

இதுசம்பந்தமாக இப்போது பல பிரச்னைகள் ஆராயப்பட்டு வருவதாயும், பின்பு நிச்சயமான முடிவை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

---

## ஊலைப் கேசியும் எலிகிடைக்கவில்லை

புதுடில்லி, மார்ச் 10

முன்னாள் பஞ்சாப் முதன் மந்திரி திரு கெய்ரானின் கொலைவழக்கு சம்பந்தமாக இதுவரை 7000 பேர் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான பேர்க்கிளி வின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 4600 வண்டிகள் சோதிக்கப்பட்டுள்ளன ஆனால் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை இத்தகவலை மந்திரி ஹாத்தி கேள்வியொன்றின் போது லோகசபையில் தெரிவித்தார்.

## இந்தியப் பிரதமரின் இரு விஜயங்கள்

புதுடில்லி, மார்ச் 10

வருகிற மே 12ம் திகதி இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி சோவியத் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வார். 19ம் திகதிவரை அவர் ரஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

ஜனாதிபதி ஜோன்ஸனின் அழைப்பிற்கிணங்க திரு. சாஸ்திரி ஜூன் 2ம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்வார். ஒரு வாரம் அவர் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்ஸன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் திரு. சாஸ்திரியின் விஜயத்தை தாம் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக் கூறினார்.

## மாஸ்கோ கம்யூனிஸ்ட் மகாநாடு

ரோமா, மார்ச் 10

மாஸ்கோவில் நடைபெற்ற 19 கம்யூனிஸ்ட் கட்சிகளின் மகாநாடு முடிவடைந்தபின், அதன் முடிவு நேற்று ரோமாபுரியில் அறிவிக்கப்பட்டது இத்தாலிய கம்யூனிஸ்ட்கட்சி அதை வெளியிட்டது.

உலக கம்யூனிஸ்ட் மகாநாடு ஒன்றுக்கு வழிவகுக்குமுகமாக எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூடவேண்டும் என மாஸ்கோ மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாம். ஒரு நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் இதர நாடுகள் தலையிடுவது பற்றி மகாநாடு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

## உலக சாந்தி ஆசிரமம்

சென்னை, மார்ச் 10

திருவொற்றியூரை அடுத்த காபாலீஸ்வரம் சூடதலையாற்றின் கரையில் உலக சாந்தி ஆசிரமம் அமைக்கப்பட்டு அதன் தொடக்க விழா ஆட்சி மொழித் துறைத்தனி அலுவலர் ஸ்ரீ கீ. இராமலிங்கனார் தலைமையில் நடைபெற்றது. திருக்குறளுக்கென்றே தனிக்களஞ்சியம் தொகுத்தல், தமிழ் இலக்கியங்கள், மூலிகைகள் குறித்து ஆராய்தல், தமிழ் இலக்கியங்களில் பயிலும் பொருட்களைக் கொண்ட காட்சிசாலை ஒன்றை அமைத்தல் பழம் ஓலைச்சுவடிகளையும் நூல்களையும் கொடுத்தல் ஆகியவையே ஆசிரமத்தின் முக்கிய குறிக்கோள் எனப்பலர் விளக்கினர்.

## குறைந்த வாக்கு; அதிக ஸதானம்

திருவனந்தபுரம், மார்ச் 10

கேரளாவில் மொத்தம் 40 ஸதானங்கள் பெற்ற இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 12,67,779 ஆனால் 36 ஸதானங்கள் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 21,28,938.

---

# "தனிநாடு அமைந்தாலே தமிழருக்கு உரிமை உண்டு"

## திரு. சுந்தரலிங்கம் விளக்கம்

கிளிநொச்சி, புதன்

"ஈழத் தமிழர் இலங்கையில் எத்திக்கில் வாழ்ந்தாலும் அவர்கள் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு வேற்றுமைமூலம் ஒற்றுமை காணும் தனிநாடு அமைப்பதே எமது கட்சியின் நோக்கமும் அடிப்படைக் கொள்கையுமாகும். இந்நிதியில் தமிழ் மக்களாகிய நாம் எமக்கென ஒரு தனி நாட்டை அமையாதுவிடின் எதிர்காலத்தைப் பிற்போக்குவாதிகள் மாற்றி அமைத்துவிடுவார்கள்" என்று கிளிநொச்சித் தொகுதியில் ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர் திரு. எஸ. சரவணமுத்துவை ஆதரிக்கும் முகமாக கிளிநொச்சி ஜெ-நிக்சர் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னணித் தலைவர் திரு சுந்தரலிங்கம் கூறினார்.

தமிழ் மக்களுக்கு ஒரு தனி நாடு வேண்டும். அப்படி ஒரு தனிநாட்டின் மூலமே தங்கள் உரிமைகளைப் பெற முடியுமென உணர்ந்துவிட்டார்கள். இதற்காகவே எமது இயக்கம் அன்று தொட்டு இன்றுவரை போராடிவருகின்றது என்று திரு. சுந்தரலிங்கம் கூறினார்.

திரு. எஸ. சரவணமுத்து பேசுகையில் அன்று தொடக்கம் ஒரே கொள்கையை முன்வைத்து தமிழ் மக்களுக்காக உழைக்கும் கட்சி ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியே என்றார்.

கூட்டத்திற்கு கரைச்சிக் கிராமசபை அங்கத்தவர் திரு. சி. காராளசிங்கம் தலைமை வகித்தார். மற்றும் பலரும் பேசினர்.

## கேரள விவகாரம்

திருவனந்தபுரம், மார்ச் 10

கேரள காங்கிரஸ் தலைவர் திரு. எம். ஜார்ஜ் நேற்று கவர்னர் கிரியைச் சந்தித்தார். அவருடன் கேரள முஸ்லிம் லீக் தலைவர் திரு முகம்மது கோயாவும் வந்திருந்தார். முஸ்லிம் லீக்கின் துணையுடன் அரசாங்கம் அமைக்க தமது கட்சி கடமைப்பட்டிருப்பதாக பின்பு அவர் கூறினார்.

## செந்தோமஸ் புனித சின்னம்

கோட்டயம், மார்ச் 10

செந் தோமஸின் புனிதச் சின்னத்தின் ஒரு பகுதி நேற்று டமாஸ்காவிலிருந்து கோட்டயம் வந்து சேர்ந்தது. 50 மைல் பாதை நெடுகிலும் பல்லாயிரக்கணக்கான பகதர்கள் புனிதச் சின்னத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

நீக்ரோ

## ஊர்வலம் நிறுத்தப்பட்டது

அலபாமா, மார்ச் 10

திரு. மார்ட்டின் லூதர்கிங் தலைமையில் 2000 நீக்ரோக்கள் கொண்ட ஒரு ஊர்வலத்தை நேற்று அலபாமா ராஜ்ய பொலிஸார் தடைசெய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்ஸன் இது பற்றித் தெரிவிக்கையில் நீக்ரோக்கள் வாக்களிப்பது சம்பந்தமாக விசேஷ சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கூறினார்.

## ஜோர்டான் வாபஸ் பெற்றது

அம்மான், மார்ச் 10

மேற்கு ஜெர்மனி இஸ்ரேலை அங்கீகரிப்பதை ஆட்சேபித்து, பொன் நகரிலுள்ள தமது தூதரை ஜோர்டான் வாபஸ் பெற்றிருக்கிறது.

அதே சமயம் மொராக்கோ மன்னர் ஹஸன் தமது மேற்கு ஜெர்மன் விஜயத்தை ரத்துச்செய்திருக்கிறார்.

## தென்வியட்நாம்

சைகோன், மார்ச் 10

தென்வியட்நாமில் அமெரிக்க கடற்படை துருப்புக்கள் முகாம்களில் பாதுகாப்பு நிலையை மேற்கொண்டிருக்கின்றன. டாங்குகள் அங்கு நிலைகொண்டிருக்கின்றன. இதற்கிடையில் தென்வியட்நாமில் அமெரிக்க கொள்கையை பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ஆதரித்திருக்கிறார்.

## சுவர்ண்சிங் பாக். செல்வார்

புதுடில்லி, மார்ச் 10

பாகிஸ்தானுக்கு வருமாறு வெளிநாட்டு மந்திரி திரு. புட்டோ அனுப்பிய அழைப்பைத் தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாயும், உரிய சமயத்தில் தாம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யக்கூடுமென்றும் இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங் கூறினார்.

## காமாவுக்கு சாஸ்திரி வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 10

பெச்சுவானாலாந்தின் புதிய பிரதம மந்திரியாக பதவி ஏற்றிருக்கும் திரு. செரட்ஸி காமாவிற்கு பிரதமர் சாஸ்திரி வாழ்த்துச்செய்தி அனுப்பியிருக்கிறார்.

## பூதலிங்கம்-பொட்டம்லி பேச்சு

லண்டன், மார்ச் 10

இந்திய நிதி அமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவு காரியதரிசி திரு பூதலிங்கம் நேற்று பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு. பொட்டம்லியைச் சந்தித்துப் பேசினார். ஆயுத உதவி பெறுவதுபற்றி பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் மேற்கொண்ட பேச்சுக்களைத் தொடர்ந்து இப்பேச்சு நடைபெற்றது. மந்திரி பார்பரா காஸிலையும் அவர் சந்தித்தார்.

வியட்நாம்

## யு தாண்ட் யோசனை

நியுயோர்க், மார்ச் 10

வியட்நாம் நெருக்கடியைத் தீர்க்க 7 நாடுகள் கொண்ட மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டுமென ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் யோசனை கூறியிருக்கிறார். வியட்நாம் நெருக்கடி காரணமாக உலகத் தலைநகரங்களுக்கு தாம் மேற்கொள்ளவிருந்த விஜயத்தையும் யுதாண்ட் ஒத்திவைத்திருக்கிறார்.

## காமராஜருடன் ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 10

இந்தியப் பிரதமர் நேற்று காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரைச் சந்தித்து கேரள நிலைமை பற்றி ஆலோசனை நடத்தினார்.

## "காஷ்மீரை விடமுடியாது"

ஸ்ரீநகர், மார்ச் 10

இந்தியாவுடன் காஷ்மீர் இணைப்பு இறுதியானது என்றும், என்ன ஆனாலும் இந்தக் கொள்கையைவிட்டுக் கொடுக்க முடியாது என்றும் காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் காஷ்மீர் சட்டசபையில் கூறினார்.

# "தமிழரின் இன்றைய நிலைக்கு ஒற்றையாட்சியே காரணம்"

## பிரசாரக்கூட்டத்தில் செனட்டர் மாணிக்கம்

மாவிட்டபுரம், புதன்

"இலங்கைக்கு சோல்பரி குழுவினர் வந்தபொழுது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டார். அவர் அப்படிக் கேட்டதற்குக் காரணம் சிங்கள மக்கள் பாராளுமன்றத்தில் அதிகமாக இருந்தால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சமே. ஐம்பதுக்கு ஐம்பது கிடைக்காமையால் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் சோல்பரித்திட்டத்தை எதிர்த்து அப்போது பிரிட்டனில் இருந்த குடியேற்ற நாட்டு மந்திரிக்கும், மகாதேசாதிபதிக்கும் தந்திகள் அனுப்பினார். அத்தந்திகளில் இலங்கைக்கு சமஷ்டியரசுதான் சிறந்ததெனவும் கூறியிருந்தார். அப்படிக் கூறியவர் இன்று இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சி ஏற்றதல்லவென்றும் ஒற்றையாட்சிதான் சிறந்ததென்றும் கூறுகிறார்."

காங்கேசன்துறைத் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும், உடுவில் தொகுதி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கத்தையும் ஆதரித்து மல்லாகம் [illegible] அருகாமையில் உள்ள திறந்தவெளியரங்கில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய செனட்டர் மு. மாணிக்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டம் திரு. இ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

திரு மாணிக்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழர்கள் இன்று இருக்கும் இக்கட்டான நிலைக்கு காரணம் ஒற்றையாட்சி. இவ்வொற்றையாட்சியில்தான் மொழி உரிமை, குடியுரிமை, வாக்குரிமை ஆகியன பறிக்கப்பட்டன. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில ஒற்றுமை நிலவவேண்டுமென்பதற்காக நாம் சமஷ்டி ஆட்சியைக் கோருகிறோம். ஐக்கிய அமெரிக்கா என்று சொல்லும்பொழுது அங்கு வாழும் பல மொழி பேசும் பல இன மக்களின் ஐக்கியத்தையே குறிக்கிறது.

தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும், மற்றும் கட்சிகளும் ஒற்றையாட்சித் திட்டத்தை ஆதரிக்கிறார்கள். தமிழ்க்காங்கிரஸ் ஒற்றையாட்சித் திட்டத்தை ஆதரிப்பது தமிழ்மக்களுக்கு தங்கள் பிரதேசத்தில் சுயாட்சி வேண்டாமென்று கூறுவது போல இருக்கிறது. தென்னிலங்கை சிங்களவர்கள் தமிழ் மக்களுக்கு சுயாட்சி இருக்கக்கூடாதென்று விரும்புவது போலத்தான் இருக்கிறது காங்கிரஸ் ஒற்றையாட்சி நீடிக்கவேண்டுமென்று கோருவது.

தென் இலங்கையில் உள்ள எந்தக் கட்சியினரும் சமஷ்டிக் கொள்கையை ஆதரிக்கவில்லை என்றும் ஆகையினால் சமஷ்டியை பெறமுடியாது என்று திரு. ஜி. ஜி யும், ஸ்ரீமாவோ அம்மையாரும் தமிழரசுக்கட்சியினரின் கோரிக்கையை ஒருவரும் ஒருபோதும் கொடுக்கப்போவதில்லையென்றும் கூறியுள்ளார்கள். விடுதலைக்காக போராடிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் இந்த கூற்றைத்தான் கூறிவந்திருக்கிறார்கள் ஒருதேசமக்கள் விடுதலைக்காகச் செய்த தியாகங்கள் மூலம்தான் விடுதலையைப் பெற்றதாகச் சரித்திரம் கூறுகிறது. நாம் எமது இழந்த உரிமைகளைப்பெற இன்னும் பல தியாகங்களைச்செய்யவேண்டும்.

செல்வி கலாமாணிக்கமும் மற்றும் திருவாளர்கள் வி. தாமலிங்கம், மு. சின்னத்தம்பி, யோகரத்தினம், வீ. சுப்பிரமணியம், மு. ஆலாலசுந்தரம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், செல்வி சாந்தினி லோகிதராசா உட்பட பலர் பேசினார்கள்.

## எதிர்தரப்பு வழக்கறிஞர் கைது

புதுடில்லி, மார்ச் 10

சன்யால் கொலைவழக்கில் எதிர்தரப்பு வழக்கறிஞரான திரு. கே. குப்தாவை டில்லி பொலிசார் கைது செய்தனர்.

ஒரு கிரிமினல் வழக்கில் திரு. குப்தா மத்திய பிரதேச பொலிசாரால் வேண்டப்படுவதால் டில்லி பொலிசார் அவரைக் கைது செய்தனர்.

## எடின்பரோ கோமகன்

புதுடில்லி, மார்ச் 10

புதுடில்லிவந்திருக்கும் எடின்பரோ கோமகன் இன்று பிரதமர் திரு. சாஸ்திரியைச் சந்தித்தார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் அவர் பகல் உணவு அருந்தினர்.

## "காங்கிரசுக்கு முதல் வெற்றி"

மாவிட்டபுரம், புதன்

'பொதுத் தேர்தல் நடைபெறச் சிலநாட்களே இருக்கின்றன. இதற்கிடையில் தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கு முதலாவது வெற்றி கிடைத்துவிட்டது' என்று தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கொல்லங்கலட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

காங்கேசன்துறையில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ச. ஸ்ரீ பாஸ்கரனை ஆதரித்து கொல்லங்கலட்டியில் திரு. க. செல்வரத்தினம், தலைமையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதாவது:

1960-ம் ஆண்டு சமஷ்டிக் கட்சியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சம அந்தஸ்துக் கொள்கை சிக்கலானது பொருளாதாரக் கஷ்டமுள்ளது, பிரயோசனமற்றது எனத் தெரிவித்தனர் ஆனால் அவர்களே இன்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சம அந்தஸ்துக் கொள்கையை ஒப்புக்கொண்டுள்ளனர். தமிழ்க் காங்கிரஸ் பல வருடங்களாகச் சொல்லிவரும் சம அந்தஸ்துக் கொள்கைக்குக் கிடைத்த முதலாவது வெற்றி இது. எனவே இத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெறுவது ஊர்ஜிதமாகிவிட்டது.

உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசியதாவது:

தமிழ் பேசும் மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு காங்கேசன் துறைத்துறைமுகம் அவசியமானது என்பதனை உணர்ந்து இதற்காகப் பாராளுமன்றத்தில் வாதாடினேன் தமிழ் பேசும்மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு தீர்வுகாண வேண்டுமானால் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பெருமளவில் தெரிவு செய்யவேண்டும்.

திரு. ச ஸ்ரீபாஸ்கரன் பேசும்போது, தமிழ் பேசும் மக்களின் இன்னல்களை களைந்தெறிந்து பொருளாதார சுபீட்சத்துடன் வாழ தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஆதரவளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

மற்றும் பலரும் பேசினர்.

## 'தனித்து நின்று உரிமை பெறமுடியாது'

### வவுனியா நகரசபை தலைவர் கருத்து

வவுனியா, புதன்

"வவுனியா மாவட்டத்தில் பல கிராமங்கள் இன்றும் கீழ் நிலையில் இருக்கின்றன. நமது நாட்டின் அடிப்படைத் தொழிலாகிய விவசாயத்தை நாம் முன்னேற்ற வேண்டும். அப்படி முன்னேற்றுவதற்கு நமது விவசாயத்தை விஞ்ஞான ரீதியில் செய்யவேண்டும். அப்படியானவைகளைச் செய்வதற்கு சி. சிவசிதம்பரத்தால்தான் முடியும். அவர் பாராளுமன்றத்தில் இருந்த சமயம் வவுனியா மக்களுக்குப் பாகுபாடின்றி 28,000 ஏக்கர் காணி அரசாங்கத்திடமிருந்து வாதாடி எடுத்துக்கொடுத்துள்ளார். இதன் மூலம் நாட்டிலுள்ள எல்லோருக்கும் வேலைவாய்ப்புக்கிடைக்கும். நாடு செல்வத்தால் உயரும்."

இவ்வாறு அண்மையில் செட்டிகுளம் முற்றவெளி மைதானத்தில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. ரி. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வவுனியா நகரசபைத்தலைவர் திரு. ம. பொன்னையா பேசுகையில் கூறினார். இக்கூட்டத்திற்கு திரு. எஸ். பி. பொன்னையா தலைமைவகித்தார்.

திரு. சிவசிதம்பரம் தமது தொகுதி மக்களுக்குச் செய்துள்ள சேவைகளை விளக்கிக் கூறிய திரு. பொன்னையா மேலும் குறிப்பிட்டதாவது:-

நம் இன்றைய அரசியல் நிலையில் தனித்து நின்றும் பறிபோன தமிழர் உரிமையைப் பெறமுடியாது. திரு. பொன்னம்பலம் போன்ற தலைவரின் கீழ் நின்றால் நிச்சயம் 3 வருடத்திற்குள் இலங்கை முழுவதிலும் சம அந்தஸ்துப் பெற முடியும்.

தமிழனே பரம்பரையாக ஆட்சி செய்துவந்த இந்த இலங்கையில் இன்று நடப்பதென்ன! நாட்டில் இன்று தலைவிரித்தாடும் மொழிப்பிரச்னைக்கு தீர்வு காண்பதென்றால் அறிவும் ஆற்றலும் வீரமும் உள்ளவர்களைத்தான் வேண்டும். மற்றும் பலரும் கூட்டத்தில் பேசினார்.

## "ஆசிரியர் சிங்களம் படிக்கும் உத்தரவை கைவிடச்செய்தேன்"

### முன்னாள் எம். பி. பேச்சு

வசாவிளான், புதன்

"தமிழ் ஆசிரியர்கள் சிங்களம் படிக்கவேண்டுமென யாழ்ப்பாணத்தில் உதவி வித்தியாதிபதியாக இருந்தவர் பிறப்பித்த உத்தரவை கைவிடச் செய்தேன்" என்று முன்னாள் கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் வசாவிளானில் தம்மை ஆதரிக்கு முகமாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மயிலிட்டிக் கிராமசபை அங்கத்தவர் திரு. எஸ். அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாலசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஆசிரியர் சிங்களம் படிக்க வேண்டும் என்றும், சிங்கள பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படியும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த உதவி வித்தியாதிபதி தமிழ் ஆசிரியர்களை சிங்களப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டிருந்ததுடன், சிங்களப் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்களுக்கு சம்பள உயர்வை நிறுத்திவிட்டார். வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கம் என்னிடம் வந்து முறையிட்டபோது நான் வடபகுதி உதவி வித்தியாதிபதியுடன் கடித மூலம் தொடர்புகொண்டேன். தனக்கு எழுத்துமூலம் கட்டளை பிறப்பிக்கப்படவில்லையென்றும் அவர்கள் வாயினால் சொல்லியதற்கு அமைய தான் கட்டளை பிறப்பித்ததாகவும் அப்போதிருந்த உதவி வித்தியாதிபதி தெரிவித்தார். நான் உடன் அக்கடிதத்தை கொண்டு [illegible] கல்வி மந்திரியை சந்தித்தபோது, தன் சம்மதமாக கட்டளையிடவில்லையென்று மந்திரி பதியுதீன் மாமூத் தெரிவித்தார். பின்பு நான் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தையும், குரு சங்கத்தையும் கூட்டிக் கூடி இதை எதிர்க்கும் முகமாக பிரேரணை கொண்டுவர சொன்னேன். அதன் பின்பு தமிழ் ஆசிரியர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்ற உத்தரவு கைவிடப்பட்டது

ஆசிரியர் இடமாற்ற விஷயமாக ஆசிரியர் சங்கத்தைக் கொண்ட கோஷ்டி யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விவாதித்தார்கள். அவர்களின் திட்டத்தை சகல பிரதிநிதிகளும் ஏற்று ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஓர் திட்டம் தயாரித்து, அத்திட்டத்தின்படி வருடாவருடம் 200 ஆசிரியர்களை தென் இலங்கையில் இருந்து மாற்ற வேண்டும் என 10 பிரதிநிதிகள் கேட்டிருந்தார்கள். அந்தத் திட்டத்திற்கு நான் சாதகமாக இருந்தேன். ஒரு வருடத்தில் கூடுதலான ஆசிரியர்களை மாற்றுவதினால் கல்வியின் தரம் பாதிக்கப்படும் என்ற காரணத்திற்காகத்தான் வருடாவருடம் வரும் காலியான ஸ்தானங்களுக்கு 200 ஆசிரியர்களை மாற்ற வேண்டும் என்று கருத்து தெரிவித்தேன்.

இதன் பின்பு ஒன்பது எம். பிக்கள் எனக்கும் ஆசிரிய சங்கத்திற்கும் தெரியாமல் மாறாக நடந்துகொண்டனர். அவர்கள் 9 எம். பிக்கள் ஒருபுறமும் நான் தனியாகவும் போராடி நான் தான் [illegible] வெற்றிகண்டேன். இது ஆசிரிய சமூகத்திற்கு நான் செய்த பெரிய தொண்டாகும்.

திருவாளர்கள் பா. யோகசுந்தரம், காசிலிங்கம், க. ம[illegible]லிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

## "சமஷ்டி அமைப்பில் சோஷலிஸம்"

உடுப்பிட்டி, புதன்

"தமிழரசுக் கட்சியை ஓர் தனிப்பட்ட விடுதலை இயக்கமாகவே பலர் கருதுகிறார்கள். சமஷ்டி அரசியலின் கீழ் சோஷலிச சமுதாயத்தை அமைப்பதே எமது நோக்கம். ஆசிரியர்களுக்கு மாத்திரமன்றி விவசாயிகளுக்கும் எமது கட்சியில் இடமுண்டு. இலங்கையில் சிங்கள ஏகாதிபத்தியம் ஓங்கிவிட்டது. சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக நின்று இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடிய நமக்கு இன்று சுதந்திரமில்லை. சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் அடிமைகளாகவே நாம் நடத்தப்படுகிறோம்," இவ்வாறு மந்திகையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுவேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

"ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலையிலும் சிங்களம் படிப்பிப்பதற்கென 2000 சிங்கள ஆசிரியர்களைப் பயிற்றுவித்தார்கள். இதை நாம் வன்மையாக எதிர்த்திராவிட்டால் இவ்வாசிரியர்கள் எப்பொழுதோ அனுப்பப்பட்டிருப்பார்கள். தெற்காணிச்சட்ட மசோதாவை நாம் எதிர்த்ததாகக் குறை கூறுகிறார்கள். மலைநாட்டுத் தமிழர்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் அவர்களையும் பாதிக்காதவகையில் இச் சட்டம் இயற்றப்பட்டிருந்தால் நாம் அதனை மனதார வரவேற்போம், மலைநாட்டுத்தமிழ மக்களைப் புறக்கணிக்க நாம் என்றைக்குமே தயாராயில்லை. தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடும் ஓர் விடுதலை இயக்கமே தமிழரசுக்கட்சி. இதில் ஒரு சில சுயநலப்போக்குவாதிகளும் பிற்போக்காளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மொழியுரிமை கிடைத்த பின்னர் இவர்கள் வலதுசாரிகளாகவும் இடதுசாரிகளாகவும் பிரிந்து விடுவார்கள். தமிழரசுக் கட்சியை முற்றாக ஒழிப்பதனால் மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதே தகுந்த உபாயமாகும். இந்தியத்தமிழர்கள் இலங்கை தமிழர்கள் அனைவரையும் ஒன்று படுத்தியே நமது உரிமைக்காகப் போராட வேண்டும்."

திருவாளர்கள் நடராசா, ச. புவிராஜசிங்கம், செல்லையா, சிவஞானசுந்தரம் ஆகியோருட்பட பலர் பேசினர்.

## ஹிந்திநூல்கள் தீக்கிரை

மதுரை, மார்ச் 10

மதுரையில் கல்லூரிகள் திறக்கப்பட்ட அன்று மாணவர்கள் ஹிந்தி புத்தகங்களை தீமூட்டிக் கொளுத்தினர் என அறிவிக்கப்படுகிறது.



# வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள் 2-ம் பகுதி

(நேற்றைய தொடர்ச்சி)

வட இலங்கைச் சங்கீதசபையின் 1964-ம் வருடப் பரீட்சையில் சித்திபெய்தியோர் விபரம் வருமாறு:

## மல்லாகம்

### இரண்டாம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

சாமினி வசந்தா செல்வரத்தினம், பவானி நவரத்தினம், இன்பதேவி இராசதுரை, செல்வராணி சிதம்பரப்பிள்ளை.

வயலின்

யோகினி தர்மலிங்கம், ராஜினி நவரத்தினம்.

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

மாலினி அழகரத்தினம், சிவஞானராசா சிற்றம்பலம், சிவானந்தராசா சிற்றம்பலம், கந்தேஸ்வரன் பொன்னம்பலம், சந்திரகாந்தா மாணிக்கம், சத்தியமூர்த்தி மாணிக்கம், ரஞ்சிதமலர் செல்லையா, சரோஜினிதேவி வேதராயர், ரஞ்சினி இராமலிங்கம், விஜயலெட்சுமி விசுவநாதன், தவமணிதேவன் அப்புக்குட்டி, தர்மசாந்தினி கனகரத்தினம், சத்தியதேவி எம், கந்தசாமி சங்கரப்பிள்ளை.

வாய்ப்பாட்டு, வயலின்

ரத்தினேஸ்வரி இராசரத்தினம், அருணாராணி சிதம்பரப்பிள்ளை.

### மூன்றாம்பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

பானுமதி செல்லத்துரை, சிவமலர் பொன்னுத்துரை, திலகவதி அப்பையா, மங்கையர்க்கரசி சிவலிங்கம், தனலெட்சுமிதேவி முருகேசு, தேவிகாராணி கல்லதம்பி, ஞானம்பிகை செல்லப்பா, ஸ்ரீஸ்கந்தராசா சிற்றம்பலம், திலகேஸ்வரன் அப்புக்குட்டி, சிவானந்தராசா விஸ்வநாதன், சோமசுந்தரேஸ்வரன் இராமலிங்க ஐயர், யோகராணி சண்முகம், பாலசுந்தரி சின்னத்துரை, நகுலேஸ்வரி சின்னத்தம்பி.

வயலின்

குகராணி நாகலிங்கம்.

### நான்காம் பகுதி

சாதாரண பிரிவு

வாய்ப்பாட்டு

ராஜேஸ்வரி ஜம்பகேஸ்வரக் குருக்கள், ஸ்ரீரங்கநாதன் மார்க்கண்டு, யோகரத்தினம் முருகேசு, சிவபாக்கியம் செல்லையா, உமாதேவி மாணிக்கசாமி, கமலசித்திராவதி சின்னையா.

வயலின், வாய்ப்பாட்டு

அருந்ததிதேவி இரத்தினசிங்கம்.

நூனசித்தி

வாய்ப்பாட்டு

ஸ்ரீமதி செல்லத்துரை, கமலாதேவி நடேசு.

முற்றும்

---

## சிரார்த்ததினம்


யாழ்ப்பாணம், வியாழன்

1942-ம் ஆண்டு உலகமகா யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் உணவுப் பொருட்களை ஏற்றிவருவதற்காக 'இலட்சுமி கோவிந்தா' என்னும் பாய்க்கப்பல் ஊர்காவற்றுறையிலிருந்து அரக்கனுக்குச் சென்று அங்கிருந்து அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டு இலங்கை வரும் சமயம், யப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று அக் கப்பலை நீரில் ஆழ்த்தியதால் உயிர் நீத்த அக் கப்பலின் தலைவர் திரு நீக்கிலாப் பிள்ளையின் 22-வது சிரார்த்ததினம் நேற்றைய தினம் திருநெல்வேலியில் பிரார்த்தனையோடு சிறப்பாகக்கொண்டாடப்பட்டது


REGAL — JAFFNA
NOW SHOWING
Spencer Tracy - Ingrid Bergman
in
Dr. JEKYLL & Mr. HYDE

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன்: 485)
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
நிறம்பட நடித்த
மஹாகவி காளிதாஸ்

2- வது மாதம்
கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30.
பீனாஸ (வெள்ளவத்தை)
வெம்பிளி (கண்டி)


ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்


# திருச்செல்வம் செய்திக்கு செல்வநாயகம் மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"கூட்டு அரசாங்கம் ஆதரவு கேட்டால் தமிழரசுக் கட்சி அதற்கு ஆதரவளிக்கும் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரியொன்றில் வெளிவந்த செய்தியைத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே வி செல்வநாயகமும் கட்சிக் காரியதரிசி திரு அ அமிர்தலிங்கமும் நேற்று விடுத்த ஓர் அறிக்கைமூலம் மறுத்துள்ளனர்.

அரசாங்கம் அமைப்பதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி—சமசமாஜக்கட்சி கூட்டு அரசாங்கத்தினர் தேர்தலின்பின் ஆதரவு கேட்டால் தமிழரசுக் கட்சி அந்த ஆதரவை அவர்களுக்கு அளிக்கும் என்றும் ஆனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மட்டும் தனியாக அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக்கட்சி நிச்சயம் ஆதரவு அளிக்காது என்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான திரு. எம். திருச்செல்வம் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த இரு செனட்டர்களுக்கு வாக்குறுதி அளித்ததாக அந்த ஆங்கிலத் தினசரி நேற்று முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது இச்செய்தியை மறுத்து திரு செல்வநாயகமும் திரு. அமிர்தலிங்கமும் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவ்விதமான தீர்மானம் அல்லது யோசனை எதையும் கட்சிமேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளனர். பிரதேசசபைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவோ அதற்கான நகல் மசோதா தயாரிக்கப்பட்டதாகவோ தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும் அவர்கள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

"திரு. செல்வநாயகம் "உடல்நலம் குறைந்தவராக" இருப்பதால் இவ்விஷயத்தில் ஒரு முடிவு செய்யும் பொறுப்பு தமயிடமே விடப்படுமென திரு. திருச்செல்வம் கூறியிருப்பாரென நாம் நம்பவில்லை. ஏனெனில் இதுபோன்ற முக்கியமான விஷயங்களில் கட்சிதான் தீர்மானிக்குமேயொழிய தனிப்பட்ட ஒருவர் தீர்மானிக்க முடியாதென திரு. திருச்செல்வம் அறிவார்" என்று அந்த அறிக்கையில் திரு திரு. செல்வநாயகமும் திரு. அமிர்தலிங்கமும் தெரிவித்துள்ளனர்.

## அரசியல்...

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யும் போது அபேட்சகர்களின் நடத்தை, அறிவு அனுபவம், சேவை, ராஜதந்திரம், பிற இன மக்களிடம் செல்வாக்கை பிரயோகிக்கும் சக்தி ஆகிய குணங்கள்கொண்டவர்களையே அவர்கள் தெரிவு செய்யவேண்டும், பிரிட்டிஷ் காமன்வெல்த், ஐ நா. ஆகியவற்றுக்கு தமிழ் மக்களின் செய்திகளை கொண்டு செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாயும் அவர்கள் இருக்க வேண்டும். இவ்வித அபேட்சர்களைத் தெரிவுசெய்யவேண்டுமானால் தமிழ்க்காங்கிரஸ், சமஷ்டிக் கட்சி, ஈழமுன்னணி ஆகிய மூன்று கட்சிகளிலிருந்தே தமிழ் மக்கள் அவர்களைத் தெரிவு செய்யமுடியும்.

கட்சி முறை அரசியல் இலங்கைக்கு ஏற்றதல்ல. பொதுவாக கட்சி அரசியல் பற்றி பிரபல இந்தியரும், புகழ்பெற்ற இந்தியத் தலைவர் கோபாலகிருஷ்ணகோகலே ஆரம்பித்த இந்திய ஊழியர் சங்கத்தின் அங்கத்தினருமான ஸ்ரீகோதண்டராம் கூறியிருப்பதை நாம் கவனமுடன் ஆராயவேண்டும்.

"சுவிட்ஸர்லாந்து உலகிலேயே மிகச் சிறந்த, திறமையான ஜனநாயகமென அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைப் போல் அங்குகட்சி முறைகிடையாது."

எஸ். சிவசுப்பிரமணியம்.
103/2, ஹல்ஸ்டாவ் வீதி,
கொழும்பு.

---

## "வேலியோடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றும் தென்படவில்லை. நாகமணியிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் மறுமொழியைச் சொல்லுமுன் வெடி தீர்ந்தது. எனது இடது காலில் சன்னம் பாய்ந்தது. நான் காயத்தைப் பொத்திக்கொண்டு திமிர்ந்து பார்த்தேன் 1-ம் எதிரி ஆசீர்வாதம் துவக்குடன் ஜோசப் வீட்டுப் பக்கமாகப் போனார் எனக்கடிப் பக்கத்தில் நின்ற கற்பகம், துரைராசா ஆகியோருக்கும் காயம் ஏற்பட்டது வவனியா ஆஸ்பத்திரியில் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன்

காயமடைந்த கற்பகம் சாட்சியமளித்தபோது கூறியதாவது- 2-ம் எதிரி பேதுரு 1-ம் எதிரிக்கு துவக்குக்கொடுத்ததை நான் பார்த்தேன் 1-ம் எதிரி நாகமணி வீட்டிற்கு ஓடிவந்தார் வேலியருகேவந்தபின் வெடிவைத்தார் நாகமணியின் கிணற்றுப்பக்கமாக ஓடிவந்தாரே தவிர வனவிற்கு வரவில்லை ஜோசப் வளவு வேலியோடு நின்றார் 1-ம் எதிரி ஆசீர்வாதம் என்னைப் பார்த்து குறிவைத்தார் நான் உடனே கணவனிடம் கூறினேன் இலக்குப்பார்த்துச் சுட்டதை காணவில்லை எனக்கு காயமேற்பட்டது நான் மயக்கமடைந்தேன் அதன்பின் நாகமணி வீட்டில் மயக்கம் தெளிந்தது என் கணவன் நிலத்தில் விழுந்துகிடந்தார் என்னையும் கணவனையும், என் தகப்பனாரும், சகோதரரும் ஆஸபத்திரிக்கு கொண்டுசென்றார்கள் ஓமந்தைவரை வண்டியில் சென்று, அதன்பின், வாட்கைக்கு கார் ஒழுங்கு செய்து வவனியா ஆஸபத்திரிக்குச் சென்றோம் காரில் எனது கணவன் கதைக்கவில்லை அவரை எழுப்ப யோசித்தேன் அவர் எதுவும் பேசவில்லை இச்சம்பவம் நடந்த தினம் நாகமணி, ஜோசப்பை வெட்டியதுபற்றி எனக்குத் தெரியாது 1-ம் எதிரி வெடி வைத்தபோது அவ்விடத்தில் 60 பேர் வரை நின்றார்கள்

ஜூரி- 1-ம், 2-ம் எதிரிகள் நாகமணி வீட்டிலிருந்து ஓடினார்களா?— ஆம், வேலியால் பாய்ந்து ஓடினார்கள்

இன்ஸ்பெக்டர் இஸ்மயில், என்ட்பின் சந்திரதாசா ஆகியோரும் சாட்சியமளித்தனர்

### எதிரிதரப்பு சாட்சியம்

எதிரிதரப்பில் சுப்பன் ஜோசப்சாட்சியமளித்தபோது கூறியதாவது: வளவுக்கு முன்னால் செல்லையா, காங்கேசு மற்றும் இருவர் இருந்தனர்கள். காங்கேசு "என்னுடைய மாட்டிற்கு ஏன்டா எறிந்தாய்" என்றுகேட்டார். நான் சொன்னேன் "எனது பயிரை மாடு அழித்து விட்டதால் எறிந்து கலைத்தேன்" என்று. காங்கேசு ஓடிவந்து முதுகில் அடித்தார். அதன்பின் நான் பேசாமல் வீட்டுக்குபோனேன். நான் வீட்டில் இருந்த சமயம் துரைராசாவும், செல்லையாவும், பின்பக்கமாக காட்டுக் கத்தியுடன் வந்தார்கள். 'டேய் வெளியேவாடா' என்று கூப்பிட்டார்கள், நான் தடியை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றேன். நான் போகும் போது காங்கேசுவும், இராசையாவும் துவக்கு வைத்திருந்தார்கள். துரைராசா கத்தியால் வெட்டினார். நான் தடியால் தடுத்தேன் பக்கத்தில் நின்ற செல்லையா கத்தியால் ஓங்கி வெட்டினார். செல்லையாவை நாகமணி என்றும் அழைப்பது வழக்கம்; செல்லையா வெட்டியபின் நான் திரும்பி ஓடினேன், செல்லையா போய், காங்கேசுவிடம் துவக்கைப் பறித்தார். நான் வீட்டிற்கு அருகில் போனதும் மயக்கமாய் விழுந்தேன். டாக்டர் யோகநாதன் என்னைப்பரிசோதனை செய்தார்; நாகமணிக்கு எதிராக பொலிஸ் கோர்ட்டில் ஒருவழக்கு தொடரப்பட்டது. 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. துவக்கினால் சுடப்பட்டதா என்று எனக்குத் தெரியாது.

நீதி: துவக்கு எப்போது பறிக்கப்பட்டது? - பொழுதுபடும் சமயம்.

நீதி: பிற்பகல் 4 மணிக்கு உமக்கு இந்த காயம் ஏற்படவில்லை?- இல்லை.

மு. வ: பொழுதுபடும் நேரம்தான் இந்தக்காயம் ஏற்பட்டது?- ஆம்.

மேல் விசாரணை இன்று காலை 9-15 மணிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

---

## அறிவித்தல்

11-வது ஆண்டு நிறைவு விழாவையும், தமிழ், சிங்கள புதுவருடத்தையும் முன்னிட்டு மிகப் பிரசித்திபெற்ற சன்னுகம் பிறின்ஸ் 25-4-65 வரை அரைச்சலார். 1667


வரி விளம்பரம்

விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை,
241, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 1748

12-ம் நம்பர் ஒரு ஸ்ரீ வின்ஸ் துப்பாக்கி விற்பனைக்குண்டு. லைசென்ஸ் உள்ளவர்களுக்கு விற்கப்படும். வி. தாமோதரம்பிள்ளை, ஏழாலை, சுன்னாகம். 1770

அங்கத்தவர்கள் தேவை

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. அங்கத்தவராகச் சேர்ந்துவிட்டீர்களா? பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். 1772

தொய்வு நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 13-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தேவை

(1) போட்டோ பிறிண்டிங் வேலை தெரிந்தவர்கள் உடனே தேவை, (2) ஆர்டர்கள் சேகரிப்பதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாத வருமானம் ரூபா 150-00 நேரில் வரவும். கலாசோதி இன்டஸ்ரீஸ், (பஸ் நிலையத்திற்கு முன்பாக) 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1775


---

## சுகாதார வசதிகளுக்கு ரூ. 375,000 ஒதுக்கப்பட்டுள்ளது

பம்பலப்பிட்டி, புதன்

காட்டிலுள்ள பதினைந்து பல்வேறு பகுதிகளுக்கு சுகாதார வசதிகள் செய்துகொடுப்பதற்காக உடனடியாக ரூ 375,000 ஒதுக்குவதென சுகாதார இலாகா முடிவு செய்துள்ளது.

பல பகுதிகளிலுள்ள ஏழை மக்களின் வீடுகளில் மலசலகூட வசதிகள் இல்லாது இருப்பதால், மலசலகூட வசதிகளை சுகாதார இலாகாசெய்து கொடுக்கவிருக்கிறது.

# மேதினம், புதுவருட தினம் சம்பளத்துடன் விடுமுறை

## தோட்ட தொழிலாளருக்கு புதிய சலுகை

கொழும்பு, செவ்

சிங்கள-இந்து புதுவருட தினத்தையும், மேதினத்தையும் தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக தொழில் மந்திரி திரு. சிறிவர்த்தன பிரகடனம் செய்திருக்கிறார்.

தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளருக்கு மேற்கண்ட இருதினங்களும் சம்பளத்துடன் கூடிய விடுமுறைதினமாக ஆக்கப்படுவது இதுதான் முதல் தடவையாகும்.

8 லட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளரும், 1 லட்சம் ரப்பர் தொழிலாளரும் இதன் மூலம் பயனடைவர்.

# "14 மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவது அசாத்தியம்"

சென்னை, மார்ச் 9

நாட்டின் 14 மொழிகளையும் ஆட்சிமொழியாக்குவது நடைமுறை சாத்தியமற்ற விஷயமெனத் தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் சட்டசபையில் கூறினார்.

ஹிந்தி கட்டாயமாக்கப்படமாட்டாதென்றும் ஆனால் மாணவர்கள் தங்கள் சொந்த நலனுக்காக அதைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அதேசமயம் ஆங்கிலம் துணைமொழியாக நீடிக்குமென்றும் அவர் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மதியழகன் இலங்கை இந்தியர் பற்றிய சாஸ்திரி-சிறிமா ஒப்பந்தம் பற்றிக் குறைகூறினார்.

இன்று ராஜ்யசபையில் பேசிய பிரதம மந்திரி திரு சாஸ்திரி ஆட்சிமொழி பற்றி திரு. நேருவின் வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றுவதென்பதை அரசாங்கம் நிச்சயம் ஆராயுமெனக் கூறினார்.

அரசாங்கத்தின் மூலம் ஹிந்தியைப் பரப்பக்கூடாதென்ற அண்ணாதுரையின் அறிக்கை பற்றித் தான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லையென சாஸ்திரி கூறினர்.

மாணவர்கள் வருங்காலத்தில் தென்னாட்டில் மேற்கொண்டது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாதென்றும் அரசியல் கட்சிகள் மாணவர்களின் படிப்புக்கு இடைஞ்சல் விளைவிக்கக்கூடாதென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

# அரபு நாடுகள் ஆலோசனை

கெய்ரோ, மார்ச், 9

இஸ்ரேலுடன் ராஜீய உறவை ஏற்படுத்திக்கொள்வதென மேற்கு ஜெர்மனி முடிவு செய்ததன் நிலைமை பற்றி ஆராய்வதற்காக கெய்ரோவிலுள்ள அரபுநாடுகளின் தூதர்களுடன் ஐக்கிய அரபுக் குடியரசு அரசாங்க உயர்தர அதிகாரிகள் இன்று ஆலோசனை நடத்தினர்.

நேற்றிரவு ஒரு வைபவத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸர் பேசுகையில் இஸ்ரேலுக்கு மீண்டும் ஆயுதங்கள் வழங்குவதன் மூலம் மேற்கு ஜெர்மனி அரபுக் குடியரசுகளுக்குத் துரோகம் செய்துவிட்டதென்றார்.

இஸ்ரேலுடன் ராஜீய உறவு வைத்துக்கொள்வதென்ற மேற்கு ஜெர்மனியின் தீர்மானத்துக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக பொன் நகரிலிருந்து தமது தூதரை ஈராக் அரசாங்கம் திருப்பி அழைத்துக்கொண்டது. பொன் நகர் செல்லவிருந்த மொராக்கோ மன்னர் ஹஸன் தமது விஜயத்தை ரத்துச் செய்துகொண்டார்.

---

# திருமண அழைப்பு

தர்மலிங்கம்—

பத்மரஞ்சினிதேவி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு. திருமதி சின்னப்பு அவர்களின் புத்திரன் திரு. சி. தர்மலிங்கம் (உதவி மின்னல் என்ஜினியர், அரசாங்க [illegible] பகுதி, கொழும்பு) [illegible]க்கும், யாழ்ப்பாணம் அரசாங்க ஆஸ்பத்திரி பிரதம அப்போதிக்கரி திரு. தா. சி. சோமசுந்தரத்தினதும், திருமதி சோமசுந்தரத்தினதும் புதல்வி செல்வி பத்மரஞ்சினிதேவிக்கும் 'பத்மவாசா', இல: 29, சிவப்பிரகாச வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மணமகள் இல்லத்தில் பங்குனி 4-ம் திகதி (17-3-65) புதன்கிழமை காலை 11-00 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்கும் இடையில் திருமணம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள். தனித்தனி அழைப்பு அனுப்பப்படமாட்டாது.

1774

# தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

யாழ்ப்பாணம், புதன்

தேர்தல்தினம் நெருங்க நெருங்க தேர்தல்பிரசாரவேகமும் அதிகருத்துவருகிறது. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் வட்டபகுதியைப் பொறுத்தவரையில் திருவிழாக்கோலம் பூண்டுள்ளன. வட்டபகுதியின் பலவிடங்களிலும் தேர்தல்பிரசாரக்கூட்டங்கள் பூங்காவனத் திருவிழாபோல நடைபெறுகின்றன.

சிகரங்கள், வாழைகள், மணிச்சோடனைகள் என்பன தேர்தல் பிரசாரக் கூட்டங்களை அலங்கரிக்கின்றன. சந்திக்குச் சந்தி ஒலிபெருக்கி மூலம் உரைச்சம்பாஷணைகளை கையாளும் உத்தியும் இத்தேர்தலில் கையாளப்படுகிறது.

கூட்டமுடிவில் இ போ சபையினர் அளிக்கும் பஸ் சேவையும் பிரசாரக்கூட்டங்களுக்கு உதவியளிப்பதாக உள்ளது.

இவ்வாரத்தில் இப்பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கிழக்கிலங்கை, மலைநாட்டுப் பிரமுகர்களே பெரிதும் கலந்துகொண்டுள்ளனர்.

தமிழரசுக்கட்சி அபேட்சகர்களுக்கு ஆதரவு அளிக்கும் கூட்டங்களிற் கலந்துகொள்ள மட்டக்களப்பிலிருந்து செனட்டர் எம் மாணிக்கம், செல்வி கலாமாணிக்கம், திரு. க கந்தசாமி, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். மூதூரிலிருந்து வந்த ஜனாப் முகமது அலி, கல்முனையிலிருந்துவந்த ஜனாப் மஜூர் மௌலானா ஆகியோர் இங்கு சில கூட்டங்களிற் கலந்துகொண்டு மன்னார் சென்றுள்ளனர். இதேபோல மலைநாட்டிலிருந்தும் ஓர் கோஷ்டி இங்கு வந்துள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கோஷ்டியொன்று இவ்வாரம் கிழக்கு இலங்கைக்குச் செல்லவிருக்கின்றது.

# 'தமிழினம் வாழ சமஷ்டியேசிறந்தது'

சாவகச்சேரி, செவ்

"தமிழருக்கு ஒரு ஆட்சியும் சிங்களவருக்கு ஒரு ஆட்சியும் கொண்ட கூட்டாட்சியான ஒரு சமஷ்டி ஆட்சியைப் பெறவே தமிழரசுக்கட்சி போராடிவருகின்றது. இந்த சமஷ்டி அரசியலமைப்புத்தான் தமிழினம் சுயமரியாதை உரிமையுடன் வாழ சிறந்த மார்க்கம்" என்று வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் புத்தூர் சந்தி தக்கருகாமையில் சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தலபிரசாரக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

மீசாலை கிராமசபை உறுப்பினர் திரு. ந. பரமானந்தத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் பேசியதாவது:

"தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்ற இந்த நிலைமையில் தமிழினத்தின் பிரச்னைகளைத் தீர்க்க எந்த அரசாங்கம் முன்வருகின்றதோ அவர்களோடு எமது அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக்கொடுக்காமல் கூட்டுச்சேரத் தயாராக இருக்கின்றோம்."

திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம், திரு. சு. ஜெயநாதன் உட்பட பலர் பேசினர்.

---

# பெண்களின் மோசடி அம்பலம்!

மாவிட்டபுரம், செவ்

இருஇளம் பெண்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் மோசடி செய்யும் நோக்கோடு நிதி திரட்டி வருவது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மகாரகம பொரலஸ்முவவைச் சேர்ந்த ரணசிங்க ஆராச்சிலகே சந்திராபெரேரா, தஷந்த முதியான்சலாகே இந்திராணி ஜெயக்கொடி ஆகிய இரு இளம் பெண்கள் அந்நகரில் குருடர் செவிடர் அனாதைகள் பாடசாலை ஒன்றுள்ளதாகவும் அதற்கு உதவுமாறும் கோரி பல வீடுகளிற் சென்று நிதி சேகரித்துவந்தனர். வட்டபகுதியின் பலவிடங்களிலும் இவ்வாறு இவர்கள் நிதி சேகரித்து வந்தபோது மருதனாமடத்தில் இவர்களுடைய மோசடி அம்பலமாயிற்று. மருதனாமடத்தில் உள்ள ஓர் 'கராஜில்' இரு பெண்களும் நிதி சேகரிக்கச் சென்றபோது அங்கு நின்ற மல்லாகம் நீதிமன்ற நன்னடத்தைப் பாதுகாப்பதிகாரி திரு. சி. முத்துக்குமாரசாமியிடம் சிக்கினர். இவர்கள் மீது சந்தேகம்கொண்ட திரு. முத்துக்குமாரசாமி இரு பெண்களையும் சுன்னாகப் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ இன்ஸ்பெக்டர் திரு. எஸ. வி. மூர்த்தி விசாரணை நடத்தியபோது மகாரகமையில் அவ்வாறான பாடசாலை எதுவுமில்லையெனத் தெரியவந்தது. இரு பெண்களையும் மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஜி. எப். எச். அத்துறுபானு முன்னிலையில இன்ஸபெக்டர் ஆஜர் செய்தபோது மாஜிஸ்டிரேட் இரு பெண்களையும் பிணையிற் செல்ல அனுமதியளித்தார். ஆனால் அவர்களை எவரும் பிணை எடுக்கமுன் வராமையால் இம்மாதம் 11-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# நச்சுத் திராவகம் அருந்தி மூதாட்டி மரணம்

## தற்கொலை என தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

வேலணை மேற்கைச் சேர்ந்த சுந்தரத்தின் மனைவியான 60 வயதுள்ள சிவக்கொழுந்து கடந்த 7-ம் திகதி நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டது சம்பந்தமாக திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று மரண விசாரணை நடத்தினார்.

காலஞ் சென்றவரின் புதல்வி சுந்தரநாயகி சாட்சியமளிக்கையில் கூறியதாவது

"சம்பவதினத்தன்று காலை 10 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது என் தாயார் கையில் ஒரு போத்தலுடன் வந்தார். நான் என்னவென்று கேட்டபோது நச்சுத்திராவகம் குடித்து விட்டதாகக் கூறி நிலத்தில் விழுந்தார். நான் சப்தமிடவே அயலவர்கள் உதவிக்கு ஓடிவந்தார்கள். உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம் அங்கு தயார் மரணமானார்.

காலஞ் சென்றவரின் கணவர் சுந்தரம் சாட்சியமளிக்கையில், சம்பவம் நடந்த சமயம் தான் தோட்டத்திற்குப் போயிருந்ததாயும், அவர் ஏன் நச்சுத்திராவகம் அருந்தினார் என்பது தனக்குத் தெரியாது என்றும் கூறினார்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் கே. ராஜகோபால் சாட்சியமளிக்கையில் நச்சுத்திராவகம் அருந்தியதால் மரணமானதாகக் கூறினார்;

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

யாழ்ப்பாண

# தண்ணீர்பிரச்னை வானொலியில் விவாதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தோன்றியுள்ள தண்ணீர்ப் பிரச்னை சம்பந்தமாக யாழ்ப்பாண மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலையை போக்கும் வகையில் இலங்கை வானொலி இது சம்பந்தமான விவாத அரங்கை இன்றிரவு 7-30 மணிக்கு நடத்தவிருக்கிறது. இலங்கை வானொலியின் தமிழ்ப் பகுதியில் ஒலிபரப்பாகும் இவ்விவாத அரங்கில் நில மின்சக்தி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா, நீர்பாசன இலாகா உதவி டைரக்டர் திரு. எஸ ஆறுமுகம், கோண்டாவில் இளைப்பாறிய கிராமாதிகாரி திரு. சி. இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்; இலங்கை வானொலி பேச்சுத் துறை அதிபர் திரு. அருள் தியாகராசா இதனை நடத்துவார்.

---

# வீரகத்தி விநாயகர் ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகியது. இம்மஹோத்சவம் 9 நாட்கள் வரை நடைபெறும்.

இம்மாதம் 16-ம் திகதி தேர்த் திருவிழாவும், அடுத்து சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

---

# டில்லியில் எடின்பரோ கோமகன்

புதுடில்லி, மார்ச் 9

பிரிட்டிஷ் மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் இன்று புதுடில்லி வந்தார். பிரதமர் சாஸ்திரி அவரை வரவேற்றார். எடின்பரோ கோமகன் டில்லியில் 3 தினங்கள் தங்குவார்.

# திராட்சைக் கொடிப் பதிகள்

யாழ்ப்பாணம், புதன்

சமீபத்தில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருந்த மூன்றாம் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் வட்டபகுதியில் செய்கை பண்ணக்கூடிய மூன்று இன திராட்சைக் கொடிப் பதிகள் சிலவற்றை விமானமூலம் இங்கு வரவழைத்துள்ளார். இவை விநியோகத்துக்காக யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

---

# இடமாற்றம்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை நகரசபையின் காரியதரிசி திரு. யே. ஸ்ரீ. பொன்னுத்துரை பதவிஉயர்வு பெற்று குருநாகல் மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவருடைய இடத்திற்கு வவுனியா பட்டின சபையிலிருந்து திரு. ஐயம்பிள்ளை இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

---

# 15 சட்டங்கள் ஹிந்தியில் பெயர்ப்பு

புதுடில்லி, மார்ச் 9

இதுவரை 15 சட்டங்கள் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாயும், இனிச் சட்டங்களை ஹிந்தியில் பெயர்க்கும் வேலை துரிதமாக நடைபெறுமென்றும் சட்டமந்திரி திரு. ஏ. கே. சென் லோகசபையில் அறிவித்தார்.

# ஐயாறன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

படகுதான். மின்சார வசதியோ, டெலிபோனு இல்லை, புதிய பார்லிமெண்டாவது இதையெல்லாம் கவனித்து அபிவிருத்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இத்தீவு பெரிய "டூரிஸட் சென்டர்" ஆகி உலக யாத்திரிகர்களை ஏராளமான நிச்சயம் வசீகரிக்கும்.

* * *

காரார் கடல் நெஞ்சை யுண்டார் தாமே கயிலை மலையை உடையார் தாமே, ஊராஏகம்ப முகந்தார் தாமே ஒற்றியூர் பற்றியிருந்தார் தாமே பாரார் புகழப்படுவார் தாமே பழனை பதியாவுடையார் தாமே, தீராத வல்வினை நோய் தீர்ப்பார் தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர் தாமே.

— அப்பர்சுவாமிகள்

# சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதால் சைக்கிள் சொந்தக்காரரைச் சைக்கிள்களை கவனமாக வைத்திருக்கும்படி யாழ்ப்பாண பொலிஸ குற்றப்பகுதியினர் அறிவித்துள்ளனர். மேலும் சைக்கிள் சொந்தக்காரர் குதிரைலாடன் பூட்டை மட்டும் நம்பாது தக்க இரும்புப் பூட்டுக்களை தங்கள் சைக்கிள்களுக்கு போட்டு வைத்திருக்கும்படியும் சைக்கிள் திருடர்களைப்பிடிப்பதற்கு பொலிஸ் பகுதியினருக்கு பொது மக்களை உதவிசெய்யும் படியும் கேட்டுள்ளனர். உதவிசெய்வோருக்குப் பொலிஸாரால் தக்க சன்மானம் அளிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.